அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2021/2022

## தமிழ் - ஆண்டு 11

நாள்: சனிக்கிழமை

பெயர்:

## புலன்மொழித் தேர்வு

## கேட்டலும் விளங்கிக்கொள்ளுதலும்

### அ - பகுதி

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்படும் உரைப்பகுதியைக் கேட்டு, விளங்கிக் கொண்டு, கீழ்க்காணும் கூற்றுகள் சரியாயின் ✓ எனவும், பிழையாயின் ✕ எனவும் கட்டத்தினுள் அடையாளமிடுக.**

1. சங்ககால இலக்கியங்கள் அகம், புறம் ஆகிய பாடுபொருள்களைக் கொண்டவை. ☐

2. சங்க இலக்கியங்களைப் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்று கூறுவர். ☐

3. சங்ககாலத்திற்கு அடுத்த காலத்தில் எழுந்த பெரும்பாலான பாடல்கள் புறத்தைக் கருப்பொருளாகக் கொண்டவை. ☐

4. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறளும் ஒன்றாகும். ☐

5. பல்லவர் எனும் வேற்றினத்தவர் களப்பிரரைத் தொடர்ந்து தமிழர் நிலத்தை ஆளுகை செய்தனர். ☐

6. பல்லவர் ஆட்சியில் பக்தி இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றன. ☐

7. சோழர் ஆட்சியில் தமிழ் மொழியும் தமிழர் நிலமும் உயர்ந்த நிலையை அடைந்தன. ☐

8. சோழர் ஆட்சியின் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் தமிழ் இலக்கியங்களில் செல்வாக்குச் செலுத்தவில்லை. ☐

**(8 x ½ = 4 புள்ளிகள்)**

## ஆ - பகுதி

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்படும் நேர்காணற்பகுதியைக் கேட்டு, விளங்கிக் கொண்டு கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இலக்கியப்பொழில் நிகழ்ச்சியை நடத்தும் இணைய வானொலியின் பெயர் என்ன?

_______________________________________________

2. சென்ற வார இலக்கியப்பொழில் நிகழ்ச்சியில் விளக்கப்பட்ட நூலின் பெயர் என்ன?

_______________________________________________

3. இனியவை நாற்பது நூலிலுள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது?

_______________________________________________

4. அடுத்தவாரம் பார்க்கப்படவுள்ள நூலின் பெயர் என்ன?

_______________________________________________

5. வாரந்தோறும் இலக்கியப்பொழில் நிகழ்ச்சி நடைபெறும் நாள் எது?

_______________________________________________

6. இலக்கியப்பொழில் நிகழ்ச்சியில் கூறப்படும் செய்திகளில் ஏற்படும் ஐயங்களை எதன் ஊடாக அனுப்ப வேண்டும்?

_______________________________________________

**(6 x 1 = 6 புள்ளிகள்)**